# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| மாவட்டம் : | தேனி | காலம் : | 24/04/2024 | முதல் | 28/04/2024 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 033/ 2024 | வெளியீட்டு நாள் : | 23/04/2024 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (18.04.2024 முதல் 22.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 28-04-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/04 | 19/04 | 20/04 | 21/04 | 22/04 | தேதி | நாள்-1 24/04 | நாள்-2 25/04 | நாள்-3 26/04 | நாள்-4 27/04 | நாள்-5 28/04 |
| 0.0 | 0.3 | 0.0 | 0.2 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 1 | 0 | 0 | 0 |
| 40 | 40 | 39 | 41 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 35 | 35 | 35 | 35 |
| 27 | 28 | 28 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 24 | 24 | 25 | 25 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 3 | 2 | 4 |
| 72 | 88 | 65 | 74 | 62 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 41 | 41 | 46 | 44 | 43 | | 20 | 20 | 20 | 20 | 30 |
| 10 | 7 | 11 | 8 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 8 | 6 | 8 | 6 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

*மாவட்டத்தின் ஒரு சில இடங்களில்* ஏப்ரல் 24 மற்றும் 25 *தேதி* மிக லேசான *மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது* 34°-35° *செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது* 24°-25° *செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம்* மிதமான மேகமூட்டத்துடன் *காணப்படும். மணிக்கு* 6 முதல் 8 *கி.மீ வேகத்தில், கிழக்கு* மற்றும் தென்கிழக்கு *திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.*

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி

செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம்** :

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (24.04.2024 முதல் 28.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கரும்பு, கொய்யா,** கால்நடை.

**கரும்பு:**

கரும்பிற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த TNAU கரும்பு பூஸ்டரை கரும்பு நட்ட 45, 60 மற்றும் 75 வது நாட்களில் ஒரு ஏக்கருக்கு 1 கிலோ 1.5 கிலோ மற்றும் 2 கிலோ வீதம் முறையே 200 லிட்டர் தண்ணீரில் தேவையான ஒட்டும் திரவம் கலந்து வேண்டும்.

**கொய்யா:**

கொய்யா பழப்பயிரில் தேயிலைக் கொசுவின் தாக்குதல் பரவலாக தென்படக்கூடும். இதன் தாக்குதல் இலைகள் மற்றும் கொய்யா பழங்களில் காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடியின் பாகங்களை வெட்டி அகற்றி சூரிய ஒளி நன்கு உள் செல்லும்படி கவாத்து செய்தல் வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 50 மில்லி வேப்ப எண்ணெய் உடன் 10 மில்லி புங்கம் எண்ணெய் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

கால்நடை:

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக் கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

.